Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, JULY 12, 2024

வெள்ளிக்கிழமை ஜூலை 12, 2024 | ஒளி: 10 கதிர்: 293 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ FREE



அரசியலமைப்பில் திருத்தம்:

# “குழப்பும் சூழ்ச்சி”

**மக்களிடையே தேர்தல் தொடர்பில் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்**

**தேர்தலை நடத்தாமல் இருக்க அல்ல, தேர்தலைத் தாமதப்படுத்த முயற்சிக்கின்றனர்**

ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பில் அரசியலமைப்பில் திருத்தம் கொண்டுவர அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றியமையானது ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் மக்களை குழப்பத்திற்கு கொண்டு செல்வதற்கும், அந்தத் தேர்தலை தாமதப்படுத்துவதற்கும் எடுத்துள்ள முயற்சியே ஆகும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (11) இடம்பெற்ற சட்டரீதியான ஏற்பாடுகளுக்கு அமைய உரிய காலத்தில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது பற்றிய சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே சுமந்திரன் எம்.பி இவ்வாறு தெரிவித்தார். அதன்போது அவர் மேலும் கூறுகையில்,

தொடர்ச்சி P2

## “பயங்கரவாதிகள் பட்டியலில் இணைக்கவும்”



அப்பாவி மக்களைப் பணயக் கைதிகளாக்கி தமது கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ள முயற்சிக்கும் ஜோசப் ஸ்டாலின் உட்பட புகையிரத தொழிற்சங்க தலைவர்களைப் பயங்கரவாதிகள் பட்டியலில் இணைக்க வேண்டும் என மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (11) இடம்பெற்ற சட்டரீதியான ஏற்பாடுகளுக்கு அமைய உரிய காலத்தில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது பற்றிய ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர்

தொடர்ச்சி P2

## கீதை மீது சத்தியம் செய்து பதவியேற்ற பெண் எம்.பி.



பிரிட்டன் பாராளுமன்றத்தில் ‘பகவத்கீதை’ மீது சத்தியம் செய்து பதவியேற்றார் 29 வயதான இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஷிவானி ராஜா என்ற பெண் எம்.பி. அண்மையில் அந்த நாட்டில் நடைபெற்ற தேர்தலில் லீசெஸ்டர் கிழக்கு தொகுதியில் போட்டியிட்டு அவர் வெற்றி பெற்றார். இந்த தொகுதி தொழிலாளர் கட்சியின் கோட்டையாகக் கடந்த தேர்தல்களில் இருந்துள்ளது.

தொடர்ச்சி P2

“வியாக்கியானத்துக்கு எதிராக செயற்பட

## மாளிகையில் சூழ்ச்சி”

**பதவிக்காலத்தில் சிக்கல் என்று குறிப்பிட்டுக் கொண்டு தொடர்ந்து கதிரையைப் பிடித்துக் கொண்டிருப்பது பைத்தியக்காரதனமான வேலை**

ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள வியாக்கியானத்துக்கு எதிராகச் செயற்பட ஜனாதிபதி மாளிகை சூழ்ச்சியில் ஈடுபட்டுள்ளதாகக் குற்றம்சாட்டியது என ஜே.வி.பி. தலைவர் அனுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பில் ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள அமைச்சரவை பத்திரம் சட்டமாவதற்கு முன்னரே அவர் படுதோல்வியடைவார் எனவும் கூறினார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (11) இடம்பெற்ற சட்டரீதியான ஏற்பாடுகளுக்கு அமைய உரிய காலத்தில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது பற்றிய சபை ஒத்திவைப்பு வேலை விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

அரசியலமைப்பின் பிரகாரம் எதிர்வரும் செப்டெம்பர் அல்லது ஒக்டோபர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் ஜனாதிபதியின் பதவிக் காலம் ஐந்து வருடங்களா அல்லது ஆறு வருடங்களா?



தொடர்ச்சி P2

## “மக்களின் பாதுகாப்பு கடும் அச்சுறுத்தல்”

சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து மக்களின் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சட்டம் ஒழுங்கை நடைமுறைப்படுத்தி, மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும், அதற்குத் தேவையான ஒத்துழைப்புகளை வழங்குவதற்குத் தாம் தயார் என்றும்



தொடர்ச்சி P2

## தமிழக மீனவர்கள் 13 பேர் கைது

**மூன்று விசைப்படகுகளையும் இலங்கை கடற்படையினர் பறிமுதல் செய்துள்ளனர்**

கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்களை, எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி இலங்கை கடற்படை கைது செய்வது வாடிக்கையாக உள்ளது. இந்த நிலையில் நெடுந்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் 13 பேரை இலங்கை கடற்படை கைது செய்துள்ளது என இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன. முன்னதாக புதுக்கோட்டை மாவட்ட மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து மீனவர்கள் 3 விசைப்படகுகளில் மீன்பிடிக்கச் சென்றனர்.

தொடர்ச்சி P2

## “ஹிஜாப் அணிந்து எழுதியோரின் பெறுபேறுகளை வெளியிடவும்”



அதிபர் போட்டிப் பரீட்சையில் ஹிஜாப் அணிந்து, பரீட்சை எழுதினார்கள் என தெரிவித்து மேல் மாகாணத்தில் 13 பரீட்சார்த்திகளின் பரீட்சை பெறுபேறுகள் இதுவரை வெளியிடப்படாமல் உள்ளன என குறிப்பிட்ட ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.யான முஜிபுர் ரஹ்மான், அவர்களின் பரீட்சை பெறுபேற்றை வெளியிட்டு அதிபர் வெற்றிடம் காணப்படும் பாடசாலைகளுக்கு அவர்களை நியமிக்க வேண்டும் வேண்டுகோள் விடுத்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (11) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தின்போதே இந்த வேண்டுகோளை விடுத்தார்.

2023 ஒகஸ்ட் மாதம் இடம்பெற்ற அதிபர் பரீட்சை பெறுபேறு கடந்த மே மாதம் வெளிவந்தது. அதன்போது மேல்மாகாணத்தைச்சேர்ந்த 13 பரீட்சார்த்திகளின் பரீட்சை பெறுபேறு இரத்துச்செய்யப்பட்டுள்ளதாக

தொடர்ச்சி P2

## 10 கோடி ரூபாய் வருமானம் இழப்பு

பணிப்புறக்கணிப்பு இடம்பெற்ற இரண்டு தினங்களில் புகையிரத திணைக்களத்திற்கு ஏறக்குறைய 10 கோடி ரூபாய் வருமான இழப்பு ஏற்பட்டுள்ளதாகத் திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் இன்று (11) தெரிவித்தார். சாதாரண நாளில் ரயில்வே துறையின் பயணிகள் போக்குவரத்து டிக்கெட் வருமானம் 4 கோடி ரூபாயாகும். அந்த வருவாயுடன் சரக்கு உள்ளிட்ட இதர வருவாயையும் சேர்த்தால் தினசரி வருமானம் சுமார் 5 கோடி ரூபாயாகும் என்று அதிகாரி கூறினார்.

தொடர்ச்சி P2




## “உலகத்துக்கு இந்தியா புத்தரை கொடுத்துள்ளது”

ரஷ்ய பயணத்தை முடித்துக்கொண்டு பிரதமர் மோடி, இரண்டு நாள் பயணமாக ஆஸ்திரியா சென்றார். அங்கு அந்நாட்டு ஜனாதிபதி அலெக்சாண்டர் வான்டர் பெல்லன் மற்றும் பிரதமர் கார்ல் நெகம்மரை சந்தித்தார்.

இந்த சந்திப்பின்போது இருநாட்டு உறவு, வர்த்தகம் உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஆஸ்திரியா வாழ் இந்தியர்களைப் பிரதமர் மோடி சந்தித்தார். ஆஸ்திரியா வாழ் இந்தியர்கள் மத்தியில் பிரதமர் மோடி பேசியதாவது,

தொடர்ச்சி P2

## கடிதம் எழுதினார் ரஞ்சித்

2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் பிரசார உத்திகளுக்கு இலங்கை பொலிஸாரை ஈடுபடுத்துதல் மற்றும் அரச அச்சகத் கூட்டுத்தாபனத்தின் பணிகளுக்கு இடையூறுகளை ஏற்படுத்த எடுக்கும் முயற்சிகளைத் தடுத்தல் சம்பந்தமாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தேர்தல் ஆணைக்குழுவுக்கு வியாழக்கிழமை (11) கடிதத்தை அனுப்பிவைத்துள்ளார்.

## “வரைவினை நிறைவேற்றுவது சாத்தியமற்றது”



ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பில் அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ள வரைவினை நிறைவேற்றுவது சாத்தியமற்றது. இது காலத்தை வீணடிக்கும் செயல் என சுதந்திர மக்கள் சபையின் பிரதிநிதியும், சுயாதீன எதிரணி எம்.பியுமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## சிறுமிக்கு மது பருக்கிய தாய் மாமன் கைது

செ.தி.பெருமாள்.

நான்கு வயதான சிறுமிக்கு மதுபானத்தை பருக்கினார் என்ற குற்றச்சாட்டின் பேரில், அச்சிறுமியின் தாய் மாமனான 31 வயதான நபர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த சம்பவம் மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஒல்டன் தோட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

இது குறித்து மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவிக்கையில்.

தொடர்ச்சி P2




## வாக்குமூலத்தை ஒளிபரப்பியது எப்படி?

அத்துருகிரியவில் ‘கிளப் வசந்த’ கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் கைதான பச்சை குத்தும் கடை உரிமையாளரின் வாக்குமூலம் தொடர்பான காணொளி காட்சியை செவ்வாய்க்கிழமை (09) ஒளிபரப்பியமை தொடர்பில் இருதரப்பு பாராளுமன்ற

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “குழப்பும் சூழ்ச்சி”

ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பில் கடந்த 8ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு தொடர்பான அறிவிப்பின் போது உயர்நீதிமன்றம் ஜனாதிபதியின் பதவிக்காலம் 5 வருடங்கள் என்பதனை தெளிவாகக் கூறியிருந்தது. அத்துடன் 19ஆவது திருத்தத்திலும் அந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. 19ஆவது திருத்தத்தில், ஜனாதிபதியின் பதவிக் காலத்தை ஐந்து வருடங்களாகக் குறைக்கும் வகையில் 30(2)ஆவது சரத்து திருத்தப்பட்டது.

இந்நிலையில், அமைச்சரவையில் ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பில் அரசியலமைப்பில் 83(பி) பிரிவைத் திருத்தம் செய்ய யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. ஆனால், ஏற்கெனவே 19ஆம் திருத்தத்தில் ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் அதில் திருத்தம் செய்ய வேண்டிய அவசியமில்லை. கடந்த 8ஆம் திகதி உயர்நீதிமன்றமும் அரசியலமைப்பில் உள்ள விடயங்களையே குறிப்பிட்டுள்ளது.

அரசியலமைப்பின், 83 (பி) இல் கூறப்பட்டுள்ளபடி, ஜனாதிபதியின் பதவிக் காலத்தைக் குறிப்பிடும் 32ஆவது சரத்தை மாற்றவும், ஜனாதிபதியின் பதவிக் காலத்தை ஆறு ஆண்டுகளுக்கு மேல் அதிகரிக்கவும் பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மற்றும் பொது வாக்கெடுப்பு என்பது அவசியமாகும்.

இந்நிலையில் ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவித்தலை விடுக்க வேண்டியுள்ள காலகட்டத்தில் ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பில் அமைச்சரவையில் யோசனை கொண்டுவருவது அவசியமற்ற விடயமாகும்.

மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தவே இதனைச் செய்கின்றனர். இதில் திருத்தம் செய்ய வேண்டும் என்று கூறி மக்களிடையே தேர்தல் தொடர்பில் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்.

தற்போதைய ஜனாதிபதிதான் அன்று 19ஆம் திருத்தத்தைப் பாராளுமன்றத்தில் கொண்டு வந்தவர். அந்த அரசியலமைப்பு திருத்தத்தில் பதவிக்காலம் 5 வருடங்கள் என்று கூறப்பட்டுள்ளது.

ஆனால், இப்போது திருத்தங்கள் தொடர்பான யோசனைகளைக் கொண்டு வந்து மக்களை ஏமாற்றத் திட்டமிடுகின்றனர். அத்துடன் தேர்தலை நடத்தாமல் இருக்க அல்ல, தேர்தலைத் தாமதப்படுத்த முயற்சிக்கின்றனர். ஆனால், ஒக்டோபர் 17ஆம் திகதிக்கு முன்னர் தேர்தலை நடத்த வேண்டும். இல்லாவிட்டால் மக்கள் வீதிக்கு இறங்கும் நிலை ஏற்படலாம் என்றார்.

# கீதை மீது சத்தியம் செய்து பதவியேற்ற பெண் எம்.பி.

இந்த சூழலில் ஷிவானி அங்கு வெற்றி பெற்றுள்ளார். அவர் கன்சர்வேடிவ் கட்சி சார்பில் அங்குப் போட்டியிட்டார். இந்நிலையில், பாராளுமன்ற உறுப்பினராக லீசெஸ்டர் கிழக்கு தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்துவது தனக்குப் பெருமையாக இருப்பதாகவும், பகவத்கீதையின் மீது சத்தியம் செய்து பதவியேற்பதாக எக்ஸ் தளத்தில் ஷிவானி தெரிவித்தார்.

# 10 கோடி ரூபாய் வருமானம் இழப்பு

ரயில் நிலையங்களில் டிக்கெட் வழங்கத் தவறியதால், வேலை நிறுத்த நாட்களில் ஓடிய ரயில்களில் பயணம் செய்த பயணிகளுக்கு டிக்கெட் கட்டணம் கிடைக்கவில்லை என்றும் குறிப்பிட்டார். வேலைநிறுத்தம் தொடர்ந்தால் இழப்பு அதிகரிக்கும் என்றார்.

# சிறுமிக்கு மது பருக்கிய தாய் மாமன் கைது

குடும்ப வறுமை காரணமாக 18 மாதங்களுக்கு முன்பு சிறுமியின் தாய் வெளிநாடொன்றுக்கு பணிப்பெண்ணாகச் சென்றுள்ளார்.

இவர்கள், உலப்பனை பகுதியைச் சேர்ந்தவர்கள். வெளிநாட்டுக்குத் தாய் சென்றபோது, தன்னுடைய 9 வயதான மகனையும், 4 வயதான மகளையும், சாமிமலை,ஒல்டன் தோட்டத்தில் உள்ள தனது தாய் வீட்டில் ஒப்படைத்து.

பிள்ளைகளைப் பார்ப்பதற்காகத் தாயின் வீட்டுக்கு அடிக்கடி வரும் மகன் (தாய் மாமன்) அந்த சிறுமிக்கு மதுவை பருக்கியுள்ளார். இதனைச் சிறுமியின் 9 வயதான அண்ணா கண்டுள்ளார். இதுதொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதை அடுத்தே அந்நபர், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேநபர், ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில், வியாழக்கிழமை (11) முன்னிறுத்தப்பட்டார். அப்போது, சந்தேக நபரை எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# தமிழக மீனவர்கள் 13 பேர் கைது

அவர்கள் நெடுந்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, எல்லை தாண்டி மீன்பிடித்ததாக இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர். மேலும் மீனவர்கள் சென்ற 3 விசைப்படகுகளையும் இலங்கை கடற்படையினர் பறிமுதல் செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள 13 மீனவர்களையும் விசாரணைக்காக காங்கேசன் கடற்படை முகாமுக்கு அழைத்துச் செல்வதாகத் தகவல் வெளியாகி உள்ளது என்றும் அந்த செய்திகளில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

# “உலகத்துக்கு இந்தியா புத்தரை கொடுத்துள்ளது”

பல ஆயிரம் ஆண்டுகளாக நாம் நமது திறமை, அறிவை பகிர்ந்து வருகிறோம். நாம் உலகிற்குப் புத்தரை (புத்த மதம் துறவி) கொடுத்துள்ளோம், யுத்தத்தை (போர்) கொடுக்கவில்லை. இந்தியா எப்போது அமைதி மற்றும் வளர்ச்சியைக் கொடுக்கிறது. இதனால் 21ம் நூற்றாண்டில் இந்தியா வலிமை பெற்று வருகிறது. எனது ஆஸ்திரிய பயணம் மிகவும் அர்த்தமுள்ளதாக அமைந்தது. 41 ஆண்டுகால காத்திருப்பு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியால் நிறைவுக்கு வந்துள்ளது. இந்தியாவும் ஆஸ்திரியாவும் 75 ஆண்டுகால நட்பைக் கொண்டாடுகிறது என்றார்.

# வாக்குமூலத்தை ஒளிபரப்பியது எப்படி?

உறுப்பினர்களும் பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (11) கேள்வி எழுப்பினர்.

இந்த விடயம் தொடர்பில் முதலில் கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க, .

சந்தேக நபரிடம் காவல்துறை முன்னரே விசாரித்து பின்னர் ஊடக நிகழ்ச்சி நடத்தியது தெளிவாகத் தெரிகிறது. சந்தேக நபரிடம் கேள்வி கேட்ட டி.ஐ.ஜி சில விஷயங்களை மறந்து விட்டு சில உண்மைகளை அவருக்கு நினைவூட்டுவதை நாம் தெளிவாகப் பார்த்தோம் என்றார்.

“கொலைக்குக் காரணமானவர்களை விடுவிப்பதே வீடியோ கிளிப்பை ஒளிபரப்பியதன் பின்னணியில் இருக்கும் நோக்கமாக இருக்கலாம் என எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இந்த காணொளியை பகிரங்கமாக ஒளிபரப்பினால் விசாரணைகள் மற்றும் நீதிமன்ற வழக்குகள் பாதிக்கப்படும் எனவும் அவைத் தலைவர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

# “பயங்கரவாதிகள் பட்டியலில் இணைக்கவும்”

மேலும் பேசுகையில், பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தொழிற்சங்கத்தினர் தற்போது முன்னெடுத்துள்ள பணிப் புறக்கணிப்பினால் தேர்தல் பணிகளுக்குப் பாதிப்பு ஏற்படும். பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் நியாயமற்ற கோரிக்கைகளை முன்வைத்து முன்னெடுக்கும் பணிப் புறக்கணிப்பின் பின்னணியில் குறுகிய நோக்கங்களே காணப்படுகின்றன.

தொழிற்சங்க போராட்டங்களினால் தேசிய பொருளாதாரத்துக்கு ஏற்படும் பாதிப்பு குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டும்.தொழிற்சங்கத்தினரது நியாயமற்ற கோரிக்கைகள் தொடர்பில் நாட்டு மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.முறையற்ற வகையில் மக்களைப் பணயக் கைதிகளாக்கி போராட்டங்களில் ஈடுபடுபவர்களைப் பயங்கரவாதிகள் பட்டியலில் இணைக்க வேண்டும் ன்.அரசியல் நோக்கத்துடன் செயற்படும் இவர்கள் பயங்கரவாதிகள் போல் செயற்படுகிறார்கள்.

வெற்றிடங்களுக்கு நியமனம் வழங்குமாறு கோரிக்கைகளை முன்வைத்து புகையிரத நிலைய பொறுப்பதிகாரிகள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுகிறார்கள். சேவையில் இருப்பவர்களுக்குச் சம்பளம் வழங்குவது பெரும் போராட்டமாக உள்ள நிலையில் எவ்வாறு புதிய நியமனங்களை வழங்க முடியும்?

ஆசிரியர் தொழிற்சங்கவாதியான ஜோசப் ஸ்டாலின் நடுத்தர மக்களையும்,மாணவர்களையும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளார். இவரைப் பயங்கரவாதி என்றே குறிப்பிட வேண்டும். புகையிரத சேவை உள்ளிட்ட பொது போக்குவரத்து சேவை அத்தியாவசிய சேவையாக அறிவித்துள்ள நிலையில், அதற்கு எதிராகவே தொழிற்சங்கத்தினர் செயற்படுகிறார்கள். இவர்களுக்கு எதிராகக் கடுமையான தீர்மானங்களை எடுக்க வேண்டும். இல்லாது விட்டால் நாடு என்ற ரீதியில் ஒருபோதும் எம்மால் முன்னேற முடியாது என்றார்.

# “ஹிஜாப் அணிந்து...

அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த 13 பரீட்சார்த்திகளும் ஹிஜாப் அணிந்து பரீட்சை எழுதியதாலே பரீட்சை பெறுபேறு இடை நிறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இந்த சபையில் இதற்கு முன்னரும் நான் கேட்டபோது, அவர்களின் பெறுபேறுகளை விரைவாக வெளியிட நடவடிக்கை எடுப்பதாக கல்வி அமைச்சர் தெரிவித்திருந்தார்.

இதுதொடர்பான விசாரணை கடந்த டிசெம்பர் மாதம் 23ஆம் திகதி இடம்பெற்றுள்ளது. அதன் பின்னர் கடந்த மாதம் இதுதொடர்பாக கல்வி அமைச்சர் என்றவகையில் உங்களைச் சந்தித்துக் கதைத்தபோது, இதுதொடர்பாக உடனடியாக தலையிட்டு பரீட்சை பெறுபேறுகளை விரைவாக வெளியிட நடவடிக்கை எடுக்குமாறு உரிய அதிகாரிகளுக்குத் தெரிவித்திருந்தீர்கள். ஆனால் பரீட்சை திணைக்களம் இதுவரை 13 பரீட்சார்த்திகளினதும் பரீட்சை பெறுபேற்றை வெளியிடாமல் இருக்கிறது.

இன்று மேல் மாகாணத்தில் அதிகமான பாடசாலைகளில் அதிபர்களுக்கான வெற்றிடம் உள்ளது.. குறிப்பாகக கொழும்பு மாவட்டத்தில் பதில் அதிபர்களே பாடசாலைகளில் கடமையாற்றி வருகின்றனர். இந்த 13 பேரும் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள்.

அதனால் இந்த விடயத்தில் தலையிட்டு, இந்த பிரச்சினையை விரைவாகத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

இதற்குக் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பதிலளிக்கையில்,

இதேபோன்றதொரு பிரச்சினை திருகோணமலை மாவட்டத்திலும் இடம்பெற்றது. திருகோணமலை மாவட்ட மாணவர்களின் பரீட்சை பெறுபேறு கடந்த வாரம் வெளியிட்டோம்,. அதேபோன்று, அடுத்தவாரத்துக்குள் இவர்களின் பரீட்சை பெறுபேற்றை வெளியிட்டு இந்த பிரச்சினை தீர்க்கப்படும் .அதேவேளை இது அதிபர் சேவை பரீட்சை அல்ல. தடைதாண்டல் பரீட்சை என்றார்.

# “மக்களின் பாதுகாப்பு...

எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (11) விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு கூறினார்.

நாட்டில் சட்டம் ஒழுங்கு தொடர்பில் பாரிய பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. வருகிறார்கள், தாக்குதல் நடத்துகிறார்கள், போகிறார்கள். எல்லா இடங்களிலும் வன்முறைகள் தலைதூக்கியுள்ளன. இது தொடர்பில் மக்களிடையே பெரும் அச்சம் ஏற்பட்டுள்ளது. சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளன.

மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் கடமையாகும். பாதுகாப்பு தொடர்பில் பெரும் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இதனை எப்படித் தீர்க்கப் போகின்றீர்கள். இதனைத் தடுக்க நாங்கள் எங்களின் ஒத்துழைப்பை வழங்குவோம். கொலைகள் நடக்கின்றன. இது தொடர்பில் நாங்கள் கதைக்க வேண்டும். இது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினையாகும்.

எவ்வாறாயினும் பொது மக்களின் பாதுகாப்பு தொடர்பில் பெரிய வேலைத் திட்டங்களைச் செயற்படுத்த வேண்டும். இப்படிச் செய்யாது நாட்டால் முன்னால் செல்ல முடியுமா? சட்டவாட்சியை பலமாகச் செயற்படுத்த வேண்டும் என்று அரசாங்கத்தைக் கோருகின்றேன்.

நாங்கள் எங்கள் பக்கத்திலிருந்து சட்டம், ஒழுங்கு மற்றும் மக்கள் பாதுகாப்புக்காக எங்களின் ஒத்துழைப்பை வழங்குவோம் என்றார்.

# “வரைவினை நிறைவேற்றுவது...

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (11) இடம்பெற்ற சட்டரீதியான ஏற்பாடுகளுக்கு அமைய உரிய காலத்தில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது பற்றிய ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர், மேலும் பேசுகையில், ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பில் உயர் நீதிமன்றம் தெளிவாக வியாக்கியானம் வழங்கியுள்ள நிலையில் மீண்டும் ஜனாதிபதியின் பதவிக் காலம் ஐந்து ஆண்டுகளா ? அல்லது ஆறு ஆண்டுகளா ? என்று ஆராயப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது பதவிக் காலம் தொடர்பில் உயர்நீதிமன்றில் வியாக்கியானம் கோரினார். அவர் அரசியலமைப்பின் 18 ஆம் திருத்தத்துக்கு அமைய ஆறு வருடப் பதவிக் காலத்துக்காகவே மக்களால் தெரிவு செய்யப்பட்டார் என்ற உறுதியாகத் தர்க்கம் காணப்பட்ட நிலையில் உயர் நீதிமன்றம் அவரது பதவிக் காலம் ஐந்து வருடங்கள் என்று அறிவித்தது.

மைத்திபால சிறிசேன ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதன் பின்னரே அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டது. இந்த திருத்தம் அமுல்படுத்தப்பட்டதன் பின்னர் அதன் ஏற்பாடுகள் நாட்டின் அடிப்படை சட்டமாகக் கருதப்படும் ஆகவே அவரது பதவிக் காலம் 5 ஆண்டுகள் மாத்திரமே என்று உயர் நீதிமன்றம் வியாக்கியானம் வழங்கியிருந்தது.

ஜனாதிபதியின் பதவிக் காலம் குறித்துக் கடந்த திங்கட்கிழமை உயர்நீதிமன்றம் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பளித்துள்ளது. சி.டி. லெனவக என்ற நபர் ஜனாதிபதியின் பதவிக் காலம் குறித்து முறையான தெளிவின்மை காணப்படுவதால் ஜனாதிபதித் தேர்தலுக்கான நடவடிக்கைகளைத் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு இடைநிறுத்துமாறு வலியுறுத்தி அடிப்படை உரிமை மீறல் வழக்கினை தாக்கல் செய்திருந்தார்.இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாமல் உயர்நீதிமன்றம் நிராகரித்தது அரசியலமைப்பின் 30 (2) உப பிரிவில் ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 83(ஆ) பிரிவு ஜனாதிபதியின் பதவிக் காலத்துடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ செல்வாக்கு செலுத்தாது.இருப்பினும் இந்த உறுப்புரையை திருத்தம் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பில் அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ள வரைவினை நிறைவேற்றுவது சாத்தியமற்றது. இந்த வரைவு எதிர்வரும் 15 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டால் எதிர்வரும் மாதம் 23 ஆம் திகதி பாராளுமன்றத்துக்கு முதல் வாசிப்புக்காகச் சமர்ப்பிக்க வேண்டும்.அதன் பின்னர் இந்த சட்டமூலத்தை உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்த 14 நாட்கள் கால அவகாசம் வழங்கப்படும்.

உயர்நீதிமன்றம் தீர்ப்பளிக்கும் வரை இந்த சட்டமூலம் தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது.இந்த சட்டமூலம் தொடர்பான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 6ஆம் திகதிக்குள் முடிவுக்குக் கொண்டு வரப்படும் போது ஜனாதிபதி தேர்தல் தொடர்பான அறிவிப்புக்களை தேர்தல்கள் ஆணைக்குழு நிறைவு செய்திருக்கும்.ஆகவே இந்த சட்டமூலம் காலத்தை வீணடிக்கும் ஒரு செயற்பாடு என்றார்.

# “மாளிகையில் சூழ்ச்சி”

என்ற சந்தேகத்தை ஜனாதிபதியின் சகாக்கள் ஏற்படுத்தியுள்ளார்கள்.

ஜனாதிபதியின் பதவிக்காலத்தை ஆறு வருடங்களாக நீடிப்பது அவசியம் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளமை பாரிய சர்ச்சைகளை ஏற்படுத்தியது. ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பில் நாட்டு மக்களுக்கு எவ்வித பிரச்சினையும்,சிக்கலும் கிடையாது.ஜனாதிபதியின் பதவிக் காலம் ஐந்து ஆண்டுகள் என்று அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.


அரசியலமைப்பு தொடர்பில் பொருள்கோடல் வழங்கும் அதிகாரம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கோ அவரது சகாக்களான வஜிர,ரங்கே ஆகியோருக்கு கிடையாது. அரசியலமைப்பின் 125 ஆவது உறுப்புரையின் பிரகாரம் உயர்நீதிமன்றத்து க்கே பொருட்கோடல் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளா ? அல்லது ஆறு ஆண்டுகளா ? என மூன்று முறை உயர்நீதிமன்றில் பொருட்கோடல் செய்யப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டு மைத்திரிபால சிறிசேன தனது பதவி காலம் குறித்து உயர்நீதிமன்றில் வியாக்கியானம் கோரினார். பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் என்று உயர்நீதிமன்றம் வியாக்கியானம் வழங்கியது.

2019 ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பு விடுக்கப்பட்டதன் பின்னர் சிவில் பிரஜை ஒருவர் ஜனாதிபதியின் பதவிக்காலம் குறித்து உயர்நீதிமன்றில் வியாக்கியானம் கோரினார். அப்போதும் ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் என்று வியாக்கியானம் வழங்கப்பட்டது. 2019 ஜனாதிபதி பதவிக்காலத்தை உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்திய நபர் இந்த மாதமும் நீதிமன்றத்தை நாடினார். இம்முறையும் ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் என்று உயர்நீதிமன்றம் மூன்றாவது தடவையாகவும் வியாக்கியானம் வழங்கியுள்ளது.

ஜனாதிபதியின் பதவி காலம் ஐந்து ஆண்டுகள் என்று அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதை உயர்நீதிமன்றம் மூன்று முறை உறுதிப்படுத்தியுள்ளது. ஆகவே, இனி யாருக்கு என்ன பிரச்சினை? பதவிக்காலத்தில் சிக்கல் என்று குறிப்பிட்டுக் கொண்டு தொடர்ந்து கதிரையைப் பிடித்துக் கொண்டிருப்பது பைத்தியக்காரதனமான வேலை. இதேவேளை, ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள வியாக்கியானத்துக்கு எதிராகச் செயற்பட ஜனாதிபதி மாளிகை சூழ்ச்சியில் ஈடுபட்டுள்ளது. இதில் வஜிர அபேவர்தனவுக்கும் பங்குண்டு. ஜனாதிபதி தேர்தல் உரிய காலத்தில் நடத்தப்படும்.ரணில் விக்ரமசிங்க படுதோல்வியடைவார். அமைதியான முறையில் வீடு செல்வார் இதுவே நடக்கும். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தந்திரமானவர் அவர் எவ்வழியிலாவது தேர்தலை பிற்போடுவார் என்று அவருக்கு சார்பானவர்கள் குறிப்பிடுகிறார்கள்.அனைவரும் குறிப்பிடுவதை போன்று ரணில் தந்திரமானவரல்ல என்றார்.

# விவசாய ஓய்வூதியத்திற்கு நிதி ஒதுக்கீடு



2024ஆம் ஆண்டிற்கான விவசாய ஓய்வூதிய கொடுப்பனவுகளை வழங்குவதற்காக அரசாங்கம் 5,386 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதாக விவசாய பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை(11) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் தயாசிறி ஜயசேகர எம்.பி. எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கூறுகையில், விவசாயிகளுக்கான ஓய்வூதியம் வழங்குவதற்காக வருடாந்தம் அரசாங்கம் பெருந்தொகை நிதியை ஒதுக்கீடு செய்கின்றது.

அத்துடன், 18 வயதில் இருந்து 55 வயது வரையானவர்கள் அதற்குப் பங்களிப்பு செய்வதுடன் அறுபது வயதுக்குப் பின்னர் அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

2022 டிசம்பர் மாதம் வரையில் விவசாய காப்புறுதிக்குப் பங்களிப்பு செய்வோராக ஒரு இலட்சத்து 69 ஆயிரத்து 741 பேர் தகைமை பெற்றுள்ளனர். அந்த வருடத்தில் 453 மில்லியன் ரூபா காப்புறுதியாக வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை, 2024ஆம் ஆண்டில் 60 வயது பூர்த்தியாகும் நிலையில், காப்புறுதியைப் பெற்றுக் கொள்ள ஒரு இலட்சத்து 77 ஆயிரத்து 528 பேர் தகுதி பெற்றுள்ளனர்.

2024 மே மாதமளவில் ஓய்வூதியம் பெற்றுக்கொள்ளத் தகுதியான 636 பேர் காத்திருப்பு பட்டியலில் உள்ளனர். எனினும், எந்த வகையிலும் அவர்களது கொடுப்பனவு நிறுத்தப்படவில்லை. அவர்கள் தொடர்பான ஆவணம் உரிய பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் விரைவில் அவர்களுக்கு அந்த கொடுப்பனவு வழங்கப்படும்.

1987ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மேற்படி விவசாயிகளுக்கான ஓய்வூதியம் தொடர்ச்சியாக நடைமுறையில் உள்ளதுடன், இந்த வருடத்திற்காக 5,386 மில்லியன் ரூபா அதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்திலும் தொடர்ந்து விவசாயிகளுக்கான ஓய்வூதியம் வழங்கப்படும். இடைப்பட்ட காலங்களில் நிதி ஒதுக்கீடுகளில் சில இடர்பாடுகள் காணப்பட்டது எனினும் அதற்கான புதிய வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறைபாடுகள் தொடர்பில் திறைசேரியுடன் பேச்சுவார்த்தை நடத்தி அமைச்சரவைக்குப் பத்திரம் ஒன்றைச் சமர்ப்பிக்க முடிந்துள்ளது. அந்த வகையில் ஓய்வூதியம் வழங்கப்படாதவர்களுக்கு விரைவில் அதனை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். சம்பந்தப்பட்ட சுற்று நிருபத்தின் படி இந்த நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் நிலுவையான நிதியை திறைசேரியில் இருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## தோட்டத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில்...



அதிகரிக்கப்பட்டுள்ள 1,700 ரூபாய் நாளாந்த சம்பளத்தை தோட்டத் தொழிலாளர்களுக்கு உடனடியாக வழங்க தோட்டக் கம்பனிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஹட்டன் - டிக்ஓயா தோட்டத் தொழிலாளர்கள் வியாழக்கிழமை(11) காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அரச உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், அரசாங்கத்தால் அதிகரிக்கப்பட்ட நாளாந்தம் 1,700 ரூபாய் சம்பளத்தை தமக்கு வழங்க தோட்ட கம்பனிகள் எதிர்ப்பு தெரிவித்து வருவதாகவும், போராட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் தற்போதைய நிலவும் பொருளாதாரத்துடன் தமக்குக் கிடைக்கும் சம்பளத்தில் வாழ சிரமம் எனவும் தோட்டக் கம்பனிகள், உயர் நீதிமன்றத்தால் பெறப்பட்ட தடை உத்தரவை நீக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் போராட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## ரயிலிலிருந்து தவறி விழுந்தவர் மரணம்

ரயிலில் இருந்து தவறி விழுந்து ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம் பெமுல்ல ரயில் நிலையத்திற்கு அருகில் புதன்கிழமை (10) பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த நபர் கொழும்பு-கோட்டை நிலையத்தில் இருந்து பொல்கஹவெல நோக்கிப் பயணித்த ரயிலில் ஏறியுள்ளதாகவும், அதிக நெரிசலுடன் ஏற்பட்ட அழுத்தம் காரணமாக ரயிலில் இருந்து தவறி விழுந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ரயில் நிலைய அதிபர்களின் வேலை நிறுத்தம் காரணமாக ரயில்கள் ரத்து செய்யப்பட்டிருந்த நிலையில், சில ரயில்கள் மாத்திரமே அதிக பயணிகள் நெரிசலுடன் இயங்கியமை குறிப்பிடத்தக்கது.

**கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9 (2) ஆம் பிரிவின் கீழ் கீழ்வரும் கம்பனி 2024 ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**கம்பனியின் பழைய பெயர்:**
ஏ டீ எஸ் கன்சல்டன்டஸ் (பிரைவேட்) லிமிடெட்

**கம்பனியின் புதிய பெயர்:**
எம்ஜசீடி எஸோஸியேட்ஸ் (பிரைவேட்) லிமிடெட்

**பதிவு செய்யப்பட்ட இலக்கம்:** பி வி 15117

**பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி:**
இல. 56, பூஜ்ய ஸ்ரீ தம்மாரத்ன மாவத்தை, மாதிவெல, கோட்டே

**கம்பனி செயலாளர்கள்**
**கோர்ப்பரேட் எட்வைசரி சேர்விசஸ் (பிரைவேட்) லிமிடெட்**

## வருடாந்த பிரம்மோற்சவம்





எஸ்.கீதபொன்கலன்

திருகோணமலை– அருள்மிகு விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாத சுவாமி (சிவன்) ஆலய வருடாந்த பிரம்மோற்சவத்தின் இரதோற்சத் திருவிழா வியாழக்கிழமை (11) காலை இடம்பெற்றது.

**ஏர் ஃப்ளோ சொல்யூஷன்ஸ் (பிரைவட்) லிமிட்டட் பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் நிறுவனங்கள் சட்டம் இல 7 இன் பிரிவு 242(1) ஏர் ஃப்ளோ சொல்யூஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் (நிறுவனப் பதிவு இல. பிவி 7727) மற்றும் ஏர் ஃப்ளோ சிஸ்டம்ஸ் (பிரைவேட்) (நிறுவனப் பதிவு இல. பிவி 116288) லிமிடெட் இடையே முன்மொழியப்பட்ட கூட்டிணைப்பு தொடர்பாக, மேற்படி சட்டத்தின் பிரிவு 242 இன் துணைப் பிரிவு (3) (பி) இன் கீழ் பொதுமக்களுக்கு அறிவிப்பு.

ஏர் ஃப்ளோ சிஸ்டம்ஸ் (பிரைவேட்) லிமிடெட்டின் முழுச் சொந்தமான துணை நிறுவனமான ஏர் ஃப்ளோ சொல்யூஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட்டின் இயக்குநர்கள் குழு மற்றும் ஏர் ஃப்ளோ சிஸ்டம்ஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் இயக்குநர்கள் குழுவினால், நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 242(1)ன் படி ஏர் ஃப்ளோ சொல்யூஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் மற்றும் ஏர் ஃப்ளோ சிஸ்டம்ஸ் (பிரைவேட்) லிமிடெட் 2024 ஜுலை மாதம் 01 ஆம் திகதி அன்று கூட்டிணைக்க முடிவு செய்யப்பட்டது, இதன் மூலம் ஏர் ஃப்ளோ சிஸ்டம்ஸ் (பிரைவேட்) லிமிடெட் தொடர்ந்து இயங்கும் மற்றும் ஏர் ஃப்ளோ சொல்யூஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் இல்லாமல் போகும்.

இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து 20 நாட்களுக்குள், ஏர் ஃப்ளோ (பிரைவேட்) லிமிடெட் மற்றும் ஏர் ஃப்ளோ சிஸ்டம்ஸ் (பிரைவேட்) லிமிடெட் மூலம் நிறுவனங்களை இணைப்பதற்கான முன்மொழிவு மேற்படி சட்டத்தின் பிரிவு 243 இன் கீழ் ஆவணங்களுடன் நிறுவனங்களின் பதிவாளர் ஜெனரலுடன் சேர்ந்து பூர்த்தி செய்த பிறகு நிறுவனங்களின் பதிவாளர் ஜெனரல் மூலம் சட்டத்தின் பிரிவு 242 (1) இன் அடிப்படையில் கூட்டிணைப்பதற்கான சான்றிதழ்கள் வழங்கப்படும், அன்றிலிருந்து இந்த இணைப்பு நடைமுறைக்கு வந்துள்ளது.

சட்டத்தின் 242(4) பிரிவின்படி, கூட்டிணைப்பிற்கான முன்மொழிவின் நகல்களை ஏர் ஃப்ளோ (பிரைவேட்) லிமிடெட் மற்றும் ஏர் ஃப்ளோ சிஸ்டம்ஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் இயக்குநர்கள் குழுவால் கூட்டிணைப்பு முன்மொழிவு அங்கீகரிக்கப்பட்டதாகக் கருதப்படும், மற்றும் அவை நிறுவனத்தின் எந்தவொரு பங்குதாரர் அல்லது கடன் வழங்குபவருக்கும் அல்லது நிறுவனம் பிணைக்கப்பட்ட எந்தவொரு நபருக்கும் டின்ட்வே கார்ப்பரேட் சர்வீசஸ் (பிரைவேட்) லிமிடெட், இல. 07 1/2, தேவானம்பியதிஸ்ஸ மாவத்தை, கொழும்பு 10 என்ற இடத்தில் இருக்கும் நிறுவனத்தின் செயலாளரின் அலுவலகத்தில் சாதாரண வேலை நேரத்தில் பரிசோதிக்கலாம்.

நிறுவனத்தின் எந்தவொரு பங்குதாரர் அல்லது கடனளிப்பவர் அல்லது நிறுவனம் பிணைக்கப்பட்ட எந்தவொரு நபரும் நிறுவனத்திடம் எழுத்துப்பூர்வ கோரிக்கையின் பேரில் கூட்டிணைப்பு முன்மொழிவின் நகல்களை இலவசமாகப் பெற உரிமை உண்டு.

**ஏர் ஃப்ளோ சொல்யூஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட்டின் இயக்குநர்கள்**
**2024 ஜுலை மாதம் 01 ஆம் திகதி**

# கடமையேற்பு

நூருல் ஹுதா உமர்



அம்பாறை- பொத்துவில் பிரதேச செயலகத்தின் பதில் பிரதேச செயலாளராக சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் புதன்கிழமை (10) அன்று கடமையேற்றுக்கொண்டார்.

அம்பாறை அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்கிரம தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.ஜெகராஜன் உள்ளிட்ட மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் குழாம் கலந்து கொண்டார்கள்.

இந்நிகழ்வில், பொத்துவில் பிரதேச செயலக முன்னாள் பிரதேச செயலாளர் சட்டத்தரணி பிர்னாஸ் இஸ்மாயில் கௌரவிக்கப்பட்டதுடன், உதவிப் பிரதேச செயலாளர் எம்.ராமக்குட்டி, கணக்காளர் எஸ்.எம்.ஹாறுன், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஜனாப். சப்ரி நிருவாக உத்தியோகத்தர் நிருவாக உத்தியோகத்தர் கிராம நிலதாரி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## விபத்தில் ஒருவர் பலி; மூவர் படுகாயம்

சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு-மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏ-9 வீதியில் வியாழக்கிழமை (11) இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன், மூவர் படுகாயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வெளிநாடொன்றிலிருந்து வருகை தந்தவர்களை அழைத்துக்கொண்டு விமான நிலையத்திலிருந்து யாழ். நோக்கிப் பயணித்து கொண்டிருந்த ஹயஸ் ரக வாகனம், முன்னே சென்று கொண்டிருந்த பார ஊர்தி ஒன்றுடன் மோதியே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த நால்வரும் உடனடியாக கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், ஒருவர் உயிரிழந்துள்ளார்.



# மஞ்சளுடன் இருவர் கைது

ரஸீன் ரஸ்மின்



புத்தளம்-முந்தல், பள்ளிவாசல்பாடு கடற்பிரதேசத்தில் புதன்கிழமை(10) ஒரு தொகை மஞ்சள் மீட்கப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியில் சந்தேகத்திற்கு இடமான முறையில் கடலில் இருந்து கரையை வந்தடைந்த டிங்கி இயந்திர படகு ஒன்றை புத்தளம் தம்பபண்ணி கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படையினர் பரிசோதனை செய்துள்ளனர்.

இதன்போது, குறித்த டிங்கி இயந்திர படகில் 44 உர மூடைகளில் அடைக்கப்பட்ட 1,373 கிலோ 700 கிராம் மஞ்சள் இருந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

குறித்த டிங்கி இயந்திர படகில் பயணித்த கற்பிட்டி பகுதியைச் சேர்ந்த இருவர் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.







# பிரக்ருதி த்வனி 2024

‘அந்தரா இன்ஸ்டிடியூஷன்ஸ் ஆஃப் பெர்ஃபார்மிங் ஆர்ட்ஸ் எல்எல்சி’, துபாய் வழங்கும் ‘பிரக்ருதி த்வனி 2024 சமுத்ரா மௌக்திகா - தி கல்ச்சுரல் ஓட்’ என்ற இலவச நிகழ்வு மருதானை டவர் மண்டபத்தில் எதிர்வரும் 21ஆம் திகதி மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

துபாயில் இருந்து சிறப்புக் கலைஞர்கள், புகழ்பெற்ற இந்தியக் கலைஞர் மற்றும் ஆசிரியரான நடனம் மற்றும் இசை ஆசான்திருமதி விம்மி பகவதிஷ்வர் தலைமையில் இணைந்து ஒரு மனதுடன் செயல்படும் மாயாஜாலக் கலவை. உங்கள் கண்களுக்கு முன்பாக ஒரு கலாசார நாடா பின்னப்பட்டிருப்பதற்குச் சாட்சியாக, கலையின் ஒருங்கிணைக்கும் தாய் சக்தியின் கொண்டாட்டம் ஆகும்.









# நிராயுதபாணிகளான மக்களுக்கு பாதுகாப்பளிப்பது யார்?

நாட்டில் ஆங்காங்கே இடம்பெறும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களை பொதுவாக நோக்குமிடத்து, சட்டவிரோதத் துப்பாக்கித் தாரிகள் தலைத்தூக்கி விட்டனர் என்பது இரகசியமல்ல. கூட்டிக் கழித்து எல்லா கணக்குகளையும் ஒரு கூடைக்குள் போடும் வகையில், சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

'யுக்திய' நடவடிக்கை, மிகத்தீவிரமாக முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையிலேயே போதைப்பொருள்களை விற்பனைச் செய்யும் குழுக்களுக்கு இடையில், பழிவாங்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதனால், அப்பாவி பொதுமக்களின் பாதுகாப்பு கேள்விக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

நல்வாழ்வு, அமைதி மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல்களை எதிர்த்துப் போராட வேண்டும். ஏனென்றால், பெரும்பான்மையான மக்கள் நிராயுதபாணியாக அமைதியை விரும்பும் மக்களாக இருப்பதால் இந்தக் குற்றக் கும்பல்கள் பலியாகின்றனர்.

தேசியப் பாதுகாப்பு என்பது நாட்டை விரோத அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாப்பது மட்டுமல்ல. நாட்டின் சட்டப்பூர்வமான சக்திகளுடன் மோதும் பயங்கரவாத குழுக்களிடமிருந்து நாட்டைக் காப்பாற்றுவது மட்டுமல்ல. அந்த நாட்டில் வாழும் மக்களின் உயிரைப் பாதுகாப்பதும் தேசியப் பாதுகாப்பின் ஓர் அங்கமாகும். சமீபகாலமாக அதிகரித்து வரும் பாதாள உலகக் கும்பல்களின் எழுச்சியைப் பார்க்கும் போது, தேசிய பாதுகாப்பு பாரியளவில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளமையும் சவாலுக்கு உள்ளாகியிருப்பதும் தெளிவாகின்றது.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பலை எதிர்த்துப் போராடுவதற்கு தற்போதைய பாதுகாப்பு வலையமைப்பு போதாது என்பதையே மக்கள் கருதுகின்றனர்.

கொலையாளிகள் நெடுஞ்சாலையில் பயணிக்க வேண்டும். பக்கச் சாலைகளும் ஏராளமாக இருப்பது உண்மைதான். ஆனால் அந்த வழிகளையெல்லாம் மறைப்பதற்கு ஒரு பாதுகாப்பு வலையை விரிப்பது கடினமாக இருந்தாலும் முறையான தகவல் தொடர்பு வலையமைப்பும் இருக்க வேண்டும். அத்தகைய முறையான பொறிமுறை இல்லை என்பதை உணர்ந்துதான் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்கிறது.

இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளின் துப்பாக்கிகளில் இருந்து வெளியேறும் தோட்டாக்களுக்கு முன்னால் நாட்டு மக்கள் தஞ்சம் கேட்டு விழுந்து கிடக்க நேரிட்டால் அது மிகவும் ஆபத்தான நிலையாகும். அதை நோக்கி நாடு வீழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை நாம் கடுமையாக வலியுறுத்தியுள்ளோம். ஆனால், எவ்விதமான முன்னேற்பாடுகளும் முன்னெடுக்கப்படவில்லை.

பாதாள உலகக் கோஷ்டியினரின் தலைகள் உயர்த்தப்பட்டுள்ளன. இதனால், அக்குழுக்களுக்கு இடையிலேயே துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இவை, அப்பாவி பொதுமக்களின் பாதுகாப்பைக் கேள்விக்கு உட்படுத்தியுள்ளன. இதற்கிடையே, சந்தேகநபர்களிடம் பொலிஸார் விசாரிக்கும் போது, அவை தொடர்பிலான காட்சிகள், தொலைக்காட்சிகளில் செய்திகளாக்கப்படுகின்றன. இவை, பிரதான குற்றவாளிகளைத் தப்பிக்கச்செய்யும் செயற்பாடாகுமென பாராளுமன்றத்திலும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

பாதாள உலகக் கோஷ்டியினருக்கு இடையிலான மோதல், நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது என்பது மட்டுமன்றி, நிராயுதபாணிகளான பொதுமக்களின் பாதுகாப்பைக் கேள்விக்கு உட்படுத்தியுள்ளது என்பதை நினைவூட்டுகின்றோம்.


www.tamilmirror.lk

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

எதிரிகளுடன் ஒருபோதும் கடும் போக்குடன் நடந்துகொள்ளக் கூடாது. எதிரிகளுடனும் கூட, நாம் இணங்கிப் போகக் கூடிய குணாம்சங்கள் இருக்கும். அந்தக் குணாம்சங்களின் ஊடாக நாம் எதிரிகளுடன் பழகுவது வாழ்க்கையில் நிம்மதி பெருகத் தடை இருக்காது. எதிரிகளுடன் மட்டுமல்ல, எவருடனும் பகையை வளர்ப்பது அவசியமில்லை. பிடிக்காதவர்களுடன் வர்மம் காட்டக்கூடாது.

கோபம், ஆணவத்தால் எதையும் சாதிக்க முடியாது; வெறுப்புதான் மிஞ்சும். துன்பங்களை உடைத்தெறிய, நெஞ்சில் அமைதியுடன், எவரையும் கனிவுடன் நோக்குவோம். உங்களது நியாயங்களை நிலைநிறுத்த, பிறரை விடாப்பிடியாக வற்புறுத்தத் தேவையில்லை. சொல்ல வேண்டிய விடயத்தில், 'நான்' என்ற மமதை கலக்காது, பணிவுடன் பேசுவதே, நிரந்தர வெற்றிக்கு வழி!

கர்வம், அகங்காரம், கோபம் போன்ற துர்க்குணங்கள் தனது, குடும்பம், அயலட்டை, கிராமம், தேசம் என்பவற்றின் நலனுக்கும் கேடானவை; பதற்றம் வேண்டாம்; சாந்தியுடன் நெஞ்சத்தை வைத்திருங்கள். கடவுளை நம்பும் நாம், அனைவருக்கும் பிடித்ததைச் செய்வதே மேன்மை.

- பருத்தியூர் பால. வயிரவநாதன்

போரின் முடிவின் 15 ஆண்டுகளின் பின் – 8

# அதிகாரம் குறித்த குறிப்புகள் – 1



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

2009இல் முடிவுற்ற போருடன் இலங்கையின் அரசியலில் விடுதலைப் புலிகளின் பங்கு முடிந்து விட்டது.

இருப்பினும் வெளிநாடுகளில் உள்ள அதன் ஆதரவாளர்கள் இந்த யதார்த்தத்தை ஒப்புக்கொள்ளத் தயாராக இருப்பதாகத் தெரியவில்லை.

இலங்கை அரசு, குறிப்பாக அதன் பாதுகாப்புக் கட்டமைப்பானது, பாராளுமன்ற அரசியல் அமைப்பாகக் கூட புலிகளை மீண்டும் எழுச்சி பெற அனுமதிக்க வாய்ப்பில்லை. புலிகளுக்கு ஆதரவான புலம்பெயர்ந்தோர் தமது ஆதரவாளர்களையும் அனுதாபிகளையும் வெளிநாட்டில் அணி திரட்டும் வேலையைப் போரின் பின்னரான முதல் சில ஆண்டுகளில் மேற்கொண்டனர்.

ஆனால், காலப்போக்கில் அவை உள் முரண்பாடுகளாலும் பிளவுகளாலும் நீர்த்துப் போயின. விடுதலைப் புலிகளின் புலம்பெயர் அமைப்புகளுக்கு இடையிலான அதிகாரப் போட்டி பல வடிவங்களில் வெளிப்பட்டது. இந்தப் போட்டியின் உச்சபட்சம் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிருடன் இருக்கிறாரா? இல்லையா? என்ற விவாதமாகப் பல்லாண்டு நீடித்தது. புலம்பெயர் தேசங்களில் பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்று நம்புவோர் உண்டு.

இலங்கையில் உள்நாட்டுப் போருக்குப் பிந்தைய இன உறவுகளின் தன்மையைத் தொடர்ந்து வரையறுக்கும் ஒன்றாக இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு பற்றிய கேள்வி இருந்தது. இலங்கையின் அரசியல் சமன்பாட்டிலிருந்து இராணுவ வழி மூலம் விடுதலைப் புலிகள் அகற்றப்பட்டவுடன், புலிகள் அல்லாத தமிழ்க் கட்சிகளுடன் உடன்படிக்கை அரசியல் சமரசம் ஏற்படும் என்று இந்தியாவும் மேற்கத்தியச் சக்திகளும் நினைத்ததாகத் தெரிகிறது.

ஆனால், இலங்கையில் அது நடப்பதாகத் தெரியவில்லை. யுத்தம் நிறைவடைந்தவுடன் அரசியல் தீர்வொன்றை அமுல்படுத்துவதாக யுத்தத்தின் போது ஜனாதிபதி ராஜபக்ஷ சர்வதேச செயற்பாட்டாளர்களுக்கு உறுதியளித்தார். தமிழ் மற்றும் முஸ்லிம் சிறுபான்மையினர் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வொன்றை நோக்கி நகரும் ராஜபக்ஷ நிர்வாகத்தின் அரசியல் ஆற்றலை மட்டுப்படுத்தும் உள்ளகக் கட்டுப்பாடுகள் இருப்பதால் அந்த வாக்குறுதியானது நடைமுறைக்கு வரவில்லை.

போரின் பின்னரான இலங்கையின் ஆட்சியானது, ஜனாதிபதி ராஜபக்ஷ தனது போர் முயற்சிகளுக்கு ஆதரவாக முன்னர் ஒன்றிணைத்த ஒரு பரந்த கூட்டணியின் மையமாக உள்ள கடும் போக்கு சிங்கள தேசியவாதிகளின் கூட்டணியாகும்.

அந்தக் கூட்டணியில் இராணுவம், ஊடகங்கள், தேசியவாத புத்திஜீவிகள், புலிகளுக்கு எதிரான தமிழர்களின் அரசியல் உயரடுக்குகள், அத்துடன், தமிழர் அல்லாத சிறுபான்மையினர், இலங்கை புலம்பெயர்ந்தோர் மற்றும் பௌத்த மற்றும் கத்தோலிக்க மத நிறுவனங்கள் அடங்கும். இது ஒரு பரந்த மற்றும் சக்திவாய்ந்த போர் கூட்டணியாகும்.

எவ்வாறாயினும், உள்நாட்டுப் போருக்குப் பிந்தைய இலங்கையில் ஒரு முக்கிய உண்மை என்னவென்றால், விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக எதிர்த்துப் போராட உருவாக்கப்பட்ட அதே கூட்டணியானது, தமிழ் அரசியல் கோரிக்கைகளில் சிலவற்றையாவது பூர்த்தி செய்யக்கூடிய நியாயமான மற்றும் நியாயமான அரசியல் தீர்விற்கான வாகனமாக இருக்க முடியாது என்பதை அது தனது நடத்தையூடு உறுதி செய்ததமையாகும்.

எந்தவொரு அதிகாரப் பகிர்வு கட்டமைப்பையும் நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதி ராஜபக்ஷவின் தயக்கம் இந்த சிக்கலான பிரச்சினையில் பெருமளவில் வேரூன்றியுள்ளது. இப்பின்புலத்தில் ஜனாதிபதி ராஜபக்ஷவிடம் இரண்டு தெரிவுகள் இருந்தன. மிதவாத அரசியல் மற்றும் சித்தாந்த சக்திகளின் புதிய போருக்குப் பிந்தைய கூட்டணியை உருவாக்க வேண்டும் அல்லது இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வைத் தொடர்ந்து ஒத்திவைக்க வேண்டும். அவர் இரண்டாவதைத் தெரிவு செய்தார்.

தேசியப் பாதுகாப்பு ஆட்சியின் கீழ், அமைச்சரவை மற்றும் பாராளுமன்றம் ஆகிய இரண்டும் பாதுகாப்பு நிறுவனத்திற்குக் கீழ்ப்பட்ட இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டன. பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டம் ஆகியவை தேசியப் பாதுகாப்பு ஆட்சிக்கான சட்டக் கட்டமைப்பை வழங்கின.

போரின் உக்கிரமான காலகட்டத்தில், ஊடக சுதந்திரம் உண்மையாகவும் உருவகமாகவும் கடுமையான தாக்குதலுக்கு உள்ளானது. ஆட்சியைக் கடுமையாக விமர்சிக்கும் ஊடகவியலாளர்கள் கடத்தப்படுவதும் காணாமல் ஆக்கப்படுவதும், அன்றைய போக்காக இருந்தது.

26 ஆண்டுகால உள்நாட்டுப் போரின் கொந்தளிப்பான முடிவு இலங்கையில் அதிகார உறவுகளில் வியத்தகு மாற்றங்களுக்கு வழிவகுத்தது. இரண்டு முக்கிய போர்க் குணமிக்க தரப்புகளுக்கு இடையே பல தசாப்தங்களாக ஆயுத மோதலுக்குப் பிறகு, மோதலில் ஒரு தரப்பினர் அழிக்கப்பட்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தோல்வி பற்றிய செய்திகள் பல்வேறு குழுக்களிடையே பெறப்பட்ட விதமும் சமூகத்தின் அதிகார மாற்றங்களை எடுத்துக்காட்டுகிறது.

2009 மே மற்றும் ஜூன் மாதங்களில் நாடு முழுவதும் பிரமாண்டமான கொண்டாட்டங்கள் நடந்தன.

பொது மற்றும் தனியார் கட்டிடங்கள் மற்றும் பெரும்பாலான வீடுகளுக்கு வெளியே இலங்கைக் கொடிகள் ஏற்றப்பட்டிருந்த அதேவேளை, பாரிய கட்-அவுட்கள் மற்றும் பதாகைகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் வெற்றியைப் பெற்ற வீர வீரர்களையும் கௌரவிக்கும் வகையில் அமைந்திருந்தன.

ஜனாதிபதி தனது சொந்த சாதனைகள் மற்றும் இலங்கையின் புகழ்பெற்ற கடந்த காலத்தின் புகழ்பெற்ற மன்னர்களின் சாதனைகளுக்கு இடையே சமாந்தரத்தை வரைந்தார்.

விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்திலிருந்து நாட்டை விடுவித்ததன் மூலம், ஜனாதிபதியின் செல்வாக்கும் அதிகாரமும் முன்னெப்போதையும் விட அதிகரித்திருந்தது. ஆனால், இலங்கையின் பெரும்பான்மையான மக்கள் கொண்டாடும் போது, விடுதலைப் புலிகள் தங்கள் வன்முறைப் போராட்டத்தை நடத்துவதாகக் கூறிய தமிழ் மக்களில் பலர் இரங்கல் தெரிவித்தனர்.

அவர்களைப் பொறுத்தவரை, போர் முடிந்துவிட்டது என்ற நிம்மதி,இறந்த அல்லது காயமடைந்த உறவினர்களின் துயரத்தாலும், நடமாடும் சுதந்திரமின்றி, முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டிருந்த லட்சக்கணக்கான உயிர் பிழைத்த தமிழ் மக்களின் அவல நிலை குறித்த கோபத்தாலும் மேலெழுந்தது.

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதன் மூலம் இலங்கையில் இனி ஒரு போர் இல்லை. இருப்பினும், இரத்தக் களரி மோதலுக்கு வழிவகுத்த பல அடிப்படைச் சிக்கல்கள் மற்றும் அதிகாரப் போட்டிகள் தீர்க்கப்படாமல் இருந்தன. போர்க்கால இலங்கையை வகைப்படுத்திய சீரற்ற அதிகார உறவுகள் - இன மற்றும் மதக் குழுக்களிடையே, பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையில் மற்றும் பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையில் - போருக்குப் பிந்தைய எதிர்காலத்தை நாடு எதிர்கொள்ளும் போது இலங்கையின் சமூகத்தைத் தொடர்ந்து வடிவமைக்கிறது.

அரசியல் சீர்திருத்தம் (பிராந்திய அதிகாரப் பகிர்வு உட்பட), பொருளாதார மேம்பாடு, போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் மறுசீரமைப்பு மற்றும் நல்லிணக்கம் ஆகியவை அதிகாரத்திற்குச் சமமற்ற அணுகல் கொண்ட வெவ்வேறு அரங்காடிகளுக்கு இடையே பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டிய முயற்சிகளாகும். ஆனால், அது எதையும் செய்யவிடாமல் போரின் வெற்றி உருவாக்கிய சிங்கள-பௌத்த பேரினவாத அகங்காரம் தடுத்தது.

இலங்கையில் மாற்றப்பட்ட அதிகார உறவுகளின் அடிப்படையில் விடுதலைப் புலிகள் ஒழிப்பு பாரிய தாக்கங்களை ஏற்படுத்திய போதிலும், அதிகாரம் செலுத்தப்படும் ஏனைய அமைப்புகள் அப்படியே இருக்கின்றன.

இலங்கைச் சமூகத்தைப் புரிந்துகொள்வதற்கு, போருக்குப் பின்னரான அதன் வாய்ப்புகள் மற்றும் சவால்களைப் புரிந்துகொள்வதற்கு, இந்த பல்வேறு அதிகார உறவுகளின் தொடர்ச்சி மற்றும் மாற்றங்கள் இரண்டையும் நாம் அறிந்திருக்க வேண்டும்.

அரசியல் அமைப்புக்கு உள்ளேயும் வெளியேயும்,பொருளாதாரத் துறையிலும், மக்களின் அன்றாட வாழ்க்கையிலும் நடக்கும் அதிகாரப் பேச்சுவார்த்தைகள், எடுத்துக்காட்டாக, இராணுவ சோதனைச் சாவடிகள் அல்லது மக்களின் வீடுகளுக்குள் தேடுதல் நடவடிக்கைகள், கைதுகள் என்பன சில முக்கிய செய்தியை உணர்த்தின. அவை அதிகாரம் பற்றியதாக இருந்தன.

கடந்த சில தசாப்தங்களாக இலங்கையை ஆட்கொண்டது போன்ற ஒரு ஆயுத மோதலை பகுப்பாய்வு செய்யும் போது, அதிகாரம் எவ்வாறு கட்டுப்படுத்துகிறது மற்றும் செயல்படுத்துகிறது என்பதை நாம் காண்கிறோம். ஆயுதமேந்திய அரங்காடிகளுக்கிடையே மிகத் தெளிவான அதிகாரப் போட்டிகள் நடைபெறுகின்றன.

இருப்பினும், பல குழுக்களுக்கும் தனிநபர்களுக்கும் இடையிலான அதிகார இயக்கவியல் சமூகத்தையும் அதில் வாழும் தனிநபர்களின் வாழ்க்கையையும் வடிவமைக்கிறது. ஒரு போரின் முடிவில், புனரமைப்பு செயல்முறை ஒரு புதிய சூழலை வழங்குகிறது, இதில் முந்தைய சக்தி கட்டமைப்புகளை வலுப்படுத்தலாம் அல்லது சவாலுக்குள்ளாகலாம்.

இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழ்ப் போராளிக் குழுக்களுக்கும் இடையிலான பல தசாப்தகால யுத்தம் இலங்கையின் அதிகார மோதலின் மேலோட்டமான சித்திரிப்பாக 'இன மோதலை' ஆக்கியது. இருப்பினும், வரலாற்று ரீதியாக, அதிகாரத்திற்கான போட்டி வர்க்கம், சாதி, இனம், மதம் மற்றும் கட்சி அரசியல் சார்பு போன்ற பல்வேறு வழிகளில் நடந்துள்ளது. பல்கலாசார சமூகமாக இலங்கையில் அதிகாரம் என்பது நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது. அது இன முரண்பாட்டிலும் போரிலும் போரின் முடிவிலும் அதன் பின்னரும் ஏற்படுத்திய தாக்கம் பெரிது.

## கடிதங்கள்

### வைத்தியசாலை திறந்தும் பிரயோசனம் இல்லை

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை வளாகத்தில் நெதர்லாந்து அரசின் நிதி உதவியுடன் சுமார் 5320 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டு கடந்த மே மாதம் 25ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் திறந்து வைக்கப்பட்ட பெண் நோயியல் வைத்திய நிலையமானது தொடர்ந்து மூடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது

குறித்த வைத்திய சிகிச்சைப்பிரிவு இவ்வாறு நீண்ட காலம் மூடப்படுமாக இருந்தால், ஏனைய வைத்தியசாலைகளில் இடம்பெறுவது போன்று இந்த வைத்திய சிகிச்சைப்பிரிவில் இருக்கின்ற வைத்திய உபகரணங்களை வேறு வைத்தியசாலைகளுக்கு மாற்றுவதற்கான முயற்சிகள் கூட எதிர்காலத்தில் எடுக்கப்படலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, குறித்த வைத்திய சிகிச்சைப்பிரிவை இயங்க வைப்பதற்கு மத்திய மற்றும் மாகாண சுகாதார அமைச்சுக்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

- யது பாஸ்கரன்



பசுமை வலு பிரசன்னத்தை

# விரிவாக்கியுள்ளது SLT-MOBITEL

தாக்கத்தை ஏற்படுத்தும் நிலைபேறான ஏற்பாடுகளினூடாக காபன் பிரசன்னத்தை குறைப்பதற்கான அர்ப்பணிப்பின் அங்கமாக, தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநரான SLT-MOBITEL, தனது Co-Connection Environment, Social, and Governance (ESG) மூலோபாய வழிமுறையினூடாக சூரிய வலுவில் இயங்கும் கள நிலையங்களை மேலும் விரிவாக்கம் செய்துள்ளதாக அறிவித்துள்ளது.

ESG இல் அதிகளவு கவனம் செலுத்தி, 2018ஆம் ஆண்டில் முதலாவது சூரிய வலுவில் இயங்கும் கள நிலையத்துக்கான அடிக்கல்லை SLT-MOBITEL நாட்டியிருந்தது. பொறுப்பு வாய்ந்த கூட்டாண்மை நிறுவனம் எனும் வகையில், SLT-MOBITEL இல் பசுமை வலு என்பது முக்கிய நிரலாக அமைந்திருப்பதுடன், அதன் வியாபார மாதிரியில் ESG சிறந்த செயன்முறைகளை ஒன்றிணைப்பதற்கான அதன் அர்ப்பணிப்பின் அங்கமாக அமைந்துள்ளது. அதனூடாக, அது ஆதரவளிக்கும் புவி மற்றும் மக்களின் செலவில் வியாபார வெற்றி முன்னெடுக்கப்படாமையை உறுதி செய்கின்றது.

முதல் கட்டத்தின் கீழ், SLT-MOBITEL Mobile இனால் நாட்டின் பிரதான பகுதிகளை உள்வாங்கி பல திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் 1,000க்கும் அதிகமான



**“வியாபாரத்தின் சூழல் தாக்கத்தினூடாக புவியை பாதுகாப்பதனூடாக, SLT–MOBITEL இனால் இதர சூழலுக்கு நட்பான செயற்பாடுகளான e–கழிவு முகாமைத்துவம், சூரிய வலுவூட்டப்பட்ட பணிச் சூழல், பசுமை வலு சான்றளிக்கப்பட்ட கட்டிடங்கள் மற்றும் பல அம்சங்கள் முன்னெடுக்கப்படுகின்றன**

நிலையங்களை உள்வாங்க திட்டமிட்டுள்ளது.

புவி மற்றும் மக்களின் நலனுக்காக பசுமை வலுவை முன்னெடுத்துச் செல்ல வேண்டியதன் முக்கியத்துவத்தை SLT-MOBITEL புரிந்து கொண்டுள்ளது. அதன் பிரகாரம், உள்நாட்டு மற்றும் சர்வதேச நிலைபேறாண்மை இலக்குகளுக்கு பங்களிப்பு வழங்கும் வினைத்திறனான பசுமைச் செயற்பாடுகளை முன்னெடுக்க SLT-MOBITELதன்னை அர்ப்பணித்துள்ளது.

முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலாப் பகுதிகளிலும், பின்தங்கிய கிராமப் பகுதிகளிலும் சூரிய வலுவில் இயங்கும் கள நிலையங்களை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை SLT-MOBITEL மேற்கொண்டுள்ளது. அதனூடாக சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தாமல், இணைப்புகளை ஏற்படுத்த எதிர்பார்க்கின்றது. ஹைபிரிட் பற்றரி கட்டமைப்புகள் பொருத்தப்பட்டுள்ள பகுதிகளில், முழு நேர மின்பிறப்பாக்கிகள் இயங்குவதற்கு பதிலாக, இந்த சூரிய வலுவினூடாக, எரிபொருள் பாவனையை குறைத்து, காபன் வெளியீட்டை குறைப்பதற்கு முன்வந்துள்ளது.

வியாபாரத்தின் சூழல் தாக்கத்தினூடாக புவியை பாதுகாப்பதனூடாக, SLT-MOBITEL இனால் இதர சூழலுக்கு நட்பான செயற்பாடுகளான e-கழிவு முகாமைத்துவம், சூரிய வலுவூட்டப்பட்ட பணிச் சூழல், பசுமை வலு சான்றளிக்கப்பட்ட கட்டிடங்கள் மற்றும் பல அம்சங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

2024 நிர்மாண வலு மற்றும் மின் கண்காட்சிக்கு

# E.B. Creasy Solar அனுசரணை




ஒன்பதாவது நிர்மாண வலு மற்றும் மின் கண்காட்சி 2024, E. B. Creasy Solar இன் பிளாட்டினம் அனுசரணையில் முன்னெடுக்கப்பட்டது. பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இந்நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. நிலைபேறாண்மை அபிவிருத்திக்கான ஒப்பற்ற அர்ப்பணிப்புக்காக அறியப்படும் E. B. Creasy Solar, E.B. Creasy & Co. PLC இன் புதுப்பிக்கத்தக்க வலு பிரிவின் அங்கமாக அமைந்துள்ளது.

தூய, நிலைபேறான வலுத் தீர்வுகளை இல்லங்கள் மற்றும் தொழிற்துறைகளுக்கு வழங்கும் வகையில் நவீன Solar Grid Tied, Solar Irrigation மற்றும் Solar Hybrid தீர்வுகள் போன்றவற்றை இந்நிகழ்வில் காட்சிப்படுத்தியிருந்தது. பிளாட்டினம் அனுசரணையாளர் எனும் வகையில், புத்தாக்கம் மற்றும் நிலைபேறாண்மையை இலங்கையின் வலுத்துறையில் கட்டியெழுப்புவதற்கான தனது அர்ப்பணிப்பை E. B. Creasy Solar மீள உறுதி செய்திருந்தது.

இலங்கையின் தலைசிறந்த வங்கியாக

# கொமர்ஷல் வங்கி தெரிவு

இலங்கையின் உள்நாட்டு வங்கிகளில் மிகச் சிறந்த வங்கியாக மீண்டும் கொமர்ஷல் வங்கி தெரிவு செய்யப்பட்டுள்ளது. ஆசியாவின் நிதிச் சந்தை நிலவரம் பற்றிய உலகின் முன்னணி தகவல் மூலமாகக் திகழும் சஞ்சிகையான பினான்ஸ் ஏசியாவினால் இந்தத் தரப்படுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

பினான்ஸ் ஏசியாவால் இந்த கீர்த்திமிக்க விருது கொமர்ஷல் வங்கிக்கு வழங்கப்படுகின்றமை இது 13ஆவது தடவையாகும்.

அண்மையில் ஹொங்கொங்கின் றிட்ஸ் கார்ள்டன் ஹோட்டலில் நடைபெற்ற கோலாகலமான நிகழ்வில் கொமர்ஷல் வங்கிக்கு இந்த விருது வழங்கப்பட்டது. வங்கியின் பிரதான இடர் அதிகாரி கபில ஹெட்டிஹமு வங்கியின் சார்பாக இந்த விருதை பெற்றுக் கொண்டார்.

வங்கிக்கு கிடைத்த இந்த கீர்த்தி மிகு சர்வதேச விருது பற்றி கருத்து வெளியிட்ட வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சனத் மனதுங்க ‘இந்த விருது வங்கியின்




மூலோபாய சுறுசுறுப்பை கோடிட்டுக் காட்டுகின்றது. நெகிழ்வுப் போக்குடன் கூடிய வெளிக் காரணிகளின் செல்வாக்குகள் இருந்த போதிலும் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்ட பல்வேறு பிரிவுகளில் மிகச் சிறந்த வெளிப்பாடுகளை தருவதில் அதற்குள்ள ஆற்றல் என்பனவற்றுக்கும் இது சான்றாக அமைகின்றது. சாதகமான மற்றும் மோசமான நிலைமைகளிலும் கூட தொடர்ச்சியான எமது செழிப்பை பிரதிபலிப்பதாகவும் அது உள்ளது. எமது மூலோபாய தீர்க்கதரிசனத்தையும் செயல்நிலை ஒருமைப்பாட்டையும் அது கோடிட்டுக் காட்டுகின்றது. இந்த விருது எமது நீண்டகால தூர நோக்கிற்கும் உறுதியான அர்ப்பணம், எமது பங்குதாரர்கள் எம்மீது கொண்டுள்ள நம்பிக்கை என்பனவற்றுக்கும் ஒரு சான்றாகும்’ என்று கூறினார்.

இவ்வாண்டு பினான்ஸ் ஏசியா விருது வழங்கலில் கொமர்ஷல் வங்கியோடு இணைந்து விருதுகளை வென்ற வங்கிகளாக சீனா வங்கி (ஹொங்கொங்) சிடிபிஸி (தாய்வான்) பேங்க் மந்திரி (இந்தோனேஷியா) பப்ளிக் பேங்க் (மலேஷியா) டெக்கொம் பேங்க் (வியட்நாம்) எலயிட் பேங்க் (பாகிஸ்தான்) சிற்றி பேங்க் (பங்களாதேஷ்) என்பன காணப்படுகின்றன.

# என் புத்தக அலமாரி

‘கடந்த பத்து வருடங்களாக என்னோடுதான்
இருக்கின்றது இந்த புத்தக அலுமாரி...


கணத்த மரச் சட்டங்கள் மற்றும்
அதனிலும் கணத்த மௌனங்களால்
சூழப்பட்டு வேறெங்கும் போகவியலாத
துயரத்தையும்...
என்றுமே கண் மூடவியலாது
அவஸ்தைகளையும்
முனுமுனுப்பாய் வெளியிட்டபடி...

எவரும் இதுவரைஅறிந்திராத
என் அபத்தங்கள் - என்
அந்தரங்கங்கள்
அவமானங்களைத் தொடர்ந்த
கேலி, கிண்டல்கள்...

முழங்காலுக்கு இடையில் புதைந்து
போகும் விசும்பல்கள் என - என்
எல்லா நிலையையும்
அறிந்து வைத்திருக்கின்றது...

நான உணர்ந்திராத என் காதலை
ஒரு அதிகாலையில் எழுப்பி என்னிடம்
சொன்னதும் இதுவாகத்தான்
இருக்கவேண்டும்...

தினம் கசியும் பனிக் குளிரினையிடையே
என் உறக்கத்தை கண் விழித்துத்துப்
பார்த்திருக்கும் இந்த புத்தக அலுமாரி
எதிர்பார்த்து இருக்கலாம் என்று ஒரு நாள்
தனக்கான கவிதை எழுதுப்படுவதையும்...



இளையன்

# எல்லாமே எனது

இனி நாம் சந்திக்கும் போது
வெட்கப்பட போவதில்லை...

நான். சுண்டுக்கொத்து நிரம்பி வழிய
நம்பிக்கையை தந்து
நீ புடைக்கும் சுளகை
அசைவில் நிரந்தரமாக்கிய
கதையை எந்த
தாழ்வாரத்தில் தோண்டி புதைத்தாய்...

ஊருக்கு முந்தி அலங்கரித்து
தனி வளையில்
ஓடிவரும் உனதான நினைவுகளை
புத்துக்கட்டி மறைத்து வருகிறேன்...
இன்றோ நாளையோ
எல்லாம் வற்றிப்போகும்
கொண்ட காதலும்
கொடுத்து மீண்ட காமமும்
புத்தின் வாயிலாக விரிய
ஒருதெருவெளிச்சத்தில்
ஈசல்களாகி இறந்து கிடக்கும்
எங்கள் சுயங்கள்...

நாளாக நாளாக
நாற்றம் எடுத்து
கடந்திடுவோர் எல்லோரும்
காறி உமிழ்ந்த பின்
துடைத்து மீளும் தலைவன்
ஆகிறேன்...

ஆதலால்
இனிநாம் சந்திக்கும் போது
வெட்கப்படபோவதில்லை நான்...



காரையன் கதன்



# நீ நீயாக இரு



நிலவும் வெய்யோனாக மாறிவிடின்
உலகின் உயிரினங்களுக்கு
உறக்கம் உண்டோ...

தரகமும் தங்கமாய் மாறிவிடின்
மனைகளில் மழை நீரை
மறிப்பதுஎதுவோ...

காகமும் மயிலாகதோற்றம் கண்டால்
சூழல் சமநிலையைபேணுபவர் எவரோ...

பருத்தி பட்டாக மாற வரம் கேட்பின்
கோடைக்கு இதமான ஆடை எங்கோ...

நாயும் சிங்கமாய் மாறும் கணத்தில்
நன்றியுணர்வின் நாமத்திற்கு
ஜீவன் உண்டோ...

கடல் மாதாபூமாதேவியிடம்
தஞ்சம் கோரின் நீர்வாழிகளுக்கு
பிராணவாயு அளிப்பது எதுவோ...

பெண்ணும் ஆணாகமாறிப்போனால்
உலகில் உயிர்களுக்கு பிறப்பேது

உயர்ந்த எண்ணங்களுடன் நீ நீயாக இரு
உலகம் ஒருநாள் உன்னையும் ஏற்கும்...

பிரகதி

# முஸ்லிம் பெண்களுக்கும் ஜீவனாம்ச உரிமை உண்டு

மத வேறுபாடின்றி திருமணமான அனைத்து பெண்களுக்கும் பொருந்தும் குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 125இன் கீழ், கணவரிடமிருந்து ஜீவனாம்சம் பெற முஸ்லிம் பெண்களுக்கு உரிமையுண்டு என்று இந்திய உச்ச நீதிமன்றம் புதன்கிழமை (10) தீர்ப்பளித்தது.

உச்ச நீதிமன்ற நீதிபதிகள் பி.வி.நாகரத்னம் மற்றும் அகஸ்டின் ஜார்ஜ் மாசிஹ் ஆகியோர் அடங்கிய அமர்வு "மனைவியின் ஜீவனாம்சம் குறித்த சட்டபூர்வ உரிமையை சிஆர்பிசி பிரிவு 125, பேசுகிறது. இது முஸ்லிம் பெண்களையும் உள்ளடக்கியது" என்று தனித்தனியாக அதேசமயம் ஒரே தீர்ப்பை வழங்கியது.
இந்த அமர்வு தனது தீர்ப்பில்



"ஜீவனாம்சம் என்பது தொண்டு இல்லை. அது திருமணமான பெண்களின் உரிமை. திருமணமான அனைத்துப் பெண்களுக்கும் இது பொருந்தும். இதற்கு மதம் ஒரு பொருட்டு இல்லை" என்று கூறியிருந்தது.

மனைவிக்கு ஜீவனாம்சம் வழங்க வேண்டும் என்று குடும்ப நல நீதிமன்றம் அளித்த தீர்ப்பில் தலையிட மறுத்த தெலங்கானா உயர் நீதிமன்றத்தின் உத்தரவை எதிர்த்து முகமது அப்துல் சமது என்றபவர் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். இந்த மனுவை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

அப்துல் சமது தனது மனுவில் "விவாகரத்து பெற்ற முஸ்லிம் பெண் ஒருவர் ஜீவனாம்சம் பெறும் உரிமை சிஆர்பிசி பிரிவு 125இன் கீழ் இல்லை. முஸ்லிம் பெண்கள் (விவாகரத்து உரிமைகள் பாதுகாப்பு) சட்டம் 1986இன் விதிகளை அமல்படுத்த வேண்டும்" என்று தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் உச்ச நீதிமன்ற நீதிபதி நாகரத்னம் தனது தீர்ப்பில் "சட்டப்பிரிவு 125, திருமணமான பெண்களுக்கு மட்டுமின்றி, அனைத்து பெண்களுக்கும் பொருந்தும் என்ற முக்கிய முடிவுடன் நாங்கள் இந்த குற்றவியல் மேல்முறையீட்டை தள்ளுபடி செய்கிறோம்" என்று தெரிவித்துள்ளார்.

உத்தரப்பிரதேசம்

## பாடம் எழுதாததால் பல்லை உடைத்த ஆசிரியர்



வீட்டுப் பாடம் எழுதாத மாணவரின் பல்லை உடைத்து கடுமையாக தாக்கியதில் மாணவர் மயக்கமடைந்த சம்பவமொன்று உத்தரப்பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

ரேபரேலி மாவட்டத்தில் உள்ள தனியார் பாடசாலையில் 10ஆம் வகுப்பில் கற்கும் மாணவருக்கு ஏப்ரல் மாத கோடை விடுமுறைக்கு முன்பு வீட்டுப் பாடம் அளிக்கப்பட்டுள்ளது.

விடுமுறை முடிந்து செவ்வாய்க்கிழமை(09) பாடசாலைக்குத் திரும்பிய மாணவரிடம் ஆசிரியர், வீட்டுப் பாடங்களை கேட்டுள்ளார். தனிப்பட்ட காரணங்களால் வீட்டுப் பாடம் எழுத முடியவில்லை என்று மாணவர் தெரிவித்த நிலையில், ஆத்திரமடைந்த ஆசிரியர், மாணவரின் வாய் மற்றும் முகத்தில் பலமாக தாக்கியுள்ளார். இதில், மாணவரின் பல் உடைந்த நிலையில், தரையில் மயங்கி விழுந்துள்ளதையடுத்து ஆசிரியர் தப்பிச் சென்றுள்ளார். மயக்கமடைந்த மாணவரை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர். பெற்றோர் அளித்த புகாரின் அடிப்படையில், ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளார். சிகிச்சைகளை முடித்துக்கொண்டு மாணவன் வீடு திரும்பியுள்ளார்.

திருப்பதி

## திருப்பதியில் புகைக்க தடை

புண்ணிய வைணவ திருத்தலமாக விளங்கும் திருப்பதி நகரில் கோவிந்தராஜர், கோதண்டராமர், கபிலேஸ்வரர், பத்மாவதி தாயார் ஆகிய புகழ்பெற்ற கோயில்கள் உள்ளன. மேலும், திருமலைக்கு செல்லும் பக்தர்கள் திருப்பதி வழியாகத்தான் திருமலைக்கு செல்ல வேண்டியுள்ளது.

தற்போது திருப்பதி நகரில் பொது இடங்களில் சிகரெட், பீடி போன்றவை புகைக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும், பள்ளி, கல்லூரி அருகே 100 மீட்டருக்குள் உள்ளகடைகளில் பீடி, சிகரெட், பான்மசாலா, குட்கா போன்றவை விற்கவும் தடை செய்யப்பட்டுள்ளதாக திருப்பதி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




உத்தரப்பிரதேசம்

## "உக்ரேனுக்கு உதவுவேன்"

ரஷ்யாவிடம் இருந்து தொடர்ந்து அச்சுறுத்தலை எதிர்கொண்டு வந்த உக்ரேன், உலகின் சக்தி வாய்ந்த இராணுவ கூட்டமைப்பாகக் கருதப்படும் நேட்டோவில் இணைந்து பாதுகாப்பு தேட முயன்றது. இதனால் கோபம் அடைந்த ரஷ்யா கடந்த 2022ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் உக்ரேன் மீது போரைத் தொடங்கியது. 2 ஆண்டுகளைக் கடந்தும் போர் முடிவின்றி நீண்டு வருகிறது.

இந்த போரில் நேட்டோ உறுப்பு நாடுகள் உக்ரைனுக்கு ஆயுதங்கள் மற்றும் நிதி உதவி அளித்து வருவதால் அந்த நாட்டு இராணுவத்தால் ரஷ்யாவை எதிர்த்துத் தொடர்ந்து சண்டையிட முடிகிறது.



அதேவேளை, நேட்டோ உறுப்பு நாடுகள் உக்ரைனுக்கு ஆயுதங்கள் வழங்குவதை ரஷ்யா கடுமையாக எதிர்த்து வருகிறது. நேட்டோவில் இணையும் முடிவைக் கைவிட்டால் போரை நிறுத்த தயார் என ரஷ்ய ஜனாதிபதி புட்டின் அண்மையில் தெரிவித்தார். ஆனால், உக்ரேன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி அதனை நிராகரித்தார்.

இந்த நிலையில், நேட்டோ அமைப்பின் 75ஆவது ஆண்டு விழாவையொட்டி அமெரிக்கத் தலைநகர் வொஷிங்டனில் நேட்டோ உச்சி மாநாடு தொடங்கியது. இந்த மாநாட்டில் நேட்டோ உறுப்பு நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர். சிறப்பு அழைப்பாளராக உக்ரேன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியும் மாநாட்டில் பங்கேற்றார். மாநாட்டின் தொடக்க விழாவில் ஜனாதிபதி ஜோ பைடன் உரையாற்றினார்.

அதில், "வரவிருக்கும் மாதங்களில் அமெரிக்காவும், அதன் நட்பு நாடுகளும் உக்ரேனுக்கு கூடுதல் வான் பாதுகாப்பு அமைப்புகள் உள்பட ஏராளமான ஆயுதங்களை வழங்க முடிவு செய்துள்ளன" என்றார்.

சீனா

## ரி.வி பார்த்த சிறுமிக்கு வினோத தண்டனை



சீனாவில் குவாங்சி ஜுவாங் பகுதியில் நீண்ட நேரமாக ரி.வியை பார்த்துக்கொண்டிருந்த தனது 3 வயது மகளுக்கு தந்தையொருவர் விநோதமான தண்டனை கொடுத்த சம்பவம் கடும் கண்டனத்துக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றது.


இரவு உணவை தயாரித்ததன் பின்னர், தனது மகள் ஜியாஜியாவை சாப்பாட்டு மேஜைக்கு தந்தை அழைத்தபோது, அவர் ரி.வி பார்ப்பதில் மூழ்கியிருந்ததால் பதிலளிக்கவில்லை.

விரக்தியடைந்த தந்தை, ரி.வியை நிறுத்தி விட்டார். இதனால் குறித்த சிறுமி அழத் தொடங்கியுள்ளார்.

இதனைக் கண்ட தந்தை, தன்னுடைய மகளின் கைகளில் ஒரு கிண்ணத்தை கொடுத்து, உனது கண்ணீரால் இந்த கிண்ணத்தை நிரப்பியவுடன், நீ... ரி.வியை மீண்டும் பார்க்கலாம் என கூறியுள்ளார். தனது கண்களுக்கு கீழே கிண்ணத்தை வைத்து கண்ணீரை சேகரிக்க ஜியாஜியா முயற்சி செய்தார். 10 வினாடிகளுக்கு மேல் போராடிய அவள் சோர்வடைந்தாள். இந்த காணொளி ஜியாஜியா அம்மா பகிர்ந்துள்ளார். சில நிமிடங்களுக்கு பின் பெற்றோர் குழந்தையை சமாதானப்படுத்தினர். எனினும், குழந்தை தண்டித்த இந்த சம்பவம் கடுமையான விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது.

அமெரிக்கா

## 'இரண்டாவது நபருக்கு 'நியூராலிங்க் சிப்'




எலான் மஸ்கின் 'பிரைன்-கம்ப்யூட்டர்' ஸ்டார்ட்அப் நிறுவனமான நியூராலிங்க் விரைவில் இரண்டாவது நபருக்கு மூளையில் தனது சிப்பினை பொருத்த உள்ளது. இது குறித்த அறிவிப்பை நியூராலிங்க் புதன்கிழமை (10) வெளியிட்டது. இதில் மஸ்க் பங்கேற்றுள்ளார்.

கடந்த ஜனவரியில் முதல் முறையாக சோதனை அடிப்படையில் மனிதருக்கு மூளையில் நியூராலிங்க் நிறுவனம் சிப் பொருத்தி இருந்தது. பக்கவாத நோயால் பாதிக்கப்பட்ட 29 வயதான நோலண்ட் அதனை பொருத்திக் கொண்டார். இதன் மூலம் தன்னால் கணினியை இயக்க முடிவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சூழலில் கடந்த மே மாதம் இரண்டாவது நபருக்கு மூளையில் சிப் பொருத்துவதற்கான அனுமதியை அமெரிக்காவின் எஃப்.டி.ஏ, நியூராலிங்க் நிறுவனத்துக்கு வழங்கியதாக தகவல் வெளியானது. தற்போது அதனை உறுதி செய்யும் வகையில் விரைவில் இரண்டாவது நபருக்கு மூளையில் சிப் பொருத்துவதாக நியூராலிங்க் அறிவித்துள்ளது.



யூரோ: நெதர்லாந்தை வென்று

# இறுதிப் போட்டியில் இங்கிலாந்து

ஜேர்மனியில் நடைபெற்று வரும் ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் யூரோ கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டிக்கு இங்கிலாந்து தகுதி பெற்றுள்ளது.

வியாழக்கிழமை (11) நடைபெற்ற நெதர்லாந்துடனான அரையிறுதிப் போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் வென்றே இறுதிப் போட்டிக்கு இங்கிலாந்து தகுதி பெற்றுள்ளது.

இங்கிலாந்து சார்பாக ஹரி கேன், ஒலி வட்கின்ஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். நெதர்லாந்து சார்பாகப் பெறப்பட்ட கோலை ஸ்கெவி சிமொன்ஸ் பெற்றார்.



மூன்றாவது இருபதுக்கு–20 சர்வதேசப் போட்டியில்

## சிம்பாப்வேயைத் தோற்கடித்த இந்தியா

சிம்பாப்வேக்கெதிரான மூன்றாவது இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டியில் இந்தியா வென்றது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் சிம்பாப்வேயும், இரண்டாவது போட்டியில் இந்தியாவும் வென்றிருந்த நிலையில், ஹராரேயில் புதன்கிழமை (10) நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணியின் தலைவர் ஷுப்மன் கில் தமதணி முதலில் துடுப்பெடுத்தாடுமென அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, கில்லின் 66 (49), ருத்துராஜ் கைகவாட்டின் 49 (28), யஷஸ்வி ஜைஸ்வாலின் 36 (27), சஞ்சு சாம்சனின் ஆட்டமிழக்காத 12 (07) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 182 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் சிகண்டர் ராசா 4-0-24-2, பிளஸிங் முஸர்பனி 4-0-25-2 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 183 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே, டியோன் மையர்ஸின் ஆட்டமிழக்காத 65 (49), கிளைவ் மடன்டே 37 (26), வெலிங்டன் மசகட்சாவின் ஆட்டமிழக்காத 18 (10) ஓட்டங்களுடன் போராடியபோதும் ஆவேஷ் கான் (2), கலீல் அஹ்மட், வொஷிங்டன் சுந்தரிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 159 ஓட்டங்களைப் பெற்றது.

இப்போட்டியின் நாயகனாக சுந்தர் தெரிவானார்.



## ஒலிம்பிக் குழாத்தில் கிளியின் சரித்திரன்

நடராசா கிருஸ்ணகுமார்

கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவன் கோ. சரித்திரன் ஒலிம்பிக் போட்டி குழாத்தில் இடம்பிடித்துள்ளார். 2028, 2032 ஒலிம்பிக் போட்டி இறுதிக் குழாத்தில் உயரம் பாய்தலில் வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

சரித்திரன் 2025ஆம் ஆண்டு கணிதப் பிரிவில் கல்வி கற்கின்றார்.

இக்குழாமுக்கான முதலாம் கட்டத் தெரிவின்போது இலங்கை முழுவதிலிருந்தும் விளையாட்டில் திறமைமிக்க 202 மாணவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டனர். இரண்டாம் கட்டத்தில் 202 மாணவர்களில் தனிப்பட்ட ஆற்றல்களை பரிசோதித்து 141 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

மூன்றாம் கட்டத்தில் இரண்டாம் கட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 141 மாணவர்களிருந்து இறுதிக் கட்டத்துக்கு 56 மாணவர் தெரிவு செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவராக சரித்திரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



கோப்பா அமெரிக்கா:

## வெளியேறியது உருகுவே

ஐக்கிய அமெரிக்காவில் நடைபெற்று வரும் தென்அமெரிக்கா கால்பந்தாட்டச் சம்மேளன கோப்பா அமெரிக்கா தொடரிலிருந்து உருகுவே வெளியேற்றப்பட்டது.

வியாழக்கிழமை (11) நடைபெற்ற கொலம்பியாவுடனான அரையிறுதிப் போட்டியில் அவ்வணியின் ஜெஃபெர்சன் லெர்மா பெற்ற கோலுடன் 0-1 என்ற கோல் கணக்கில் தோற்றமையைத் தொடர்ந்தே தொடரிலிருந்து உருகுவே வெளியேற்றப்பட்டது.

எல்.பி.எல்:

## கண்டி பல்கொன்ஸை வீழ்த்திய கோல் மார்வெல்ஸ்



லங்கா பிறீமியர் லீக்கில் (எல்.பி.எல்), தம்புள்ளயில் புதன்கிழமை (10) நடைபெற்ற நடப்புச் சம்பியன்களான கண்டி பல்கொன்ஸுடனான போட்டியில் கோல் மார்வெல்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: கோல் மார்வெல்ஸ்

கண்டி பல்கொன்ஸ்: 187/9 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: அன்ட்ரே பிளெட்சர் 69 (43), தினேஷ் சந்திமால் 32 (14), அஞ்சலோ மத்தியூஸ் 29 (15), ரமேஷ் மெண்டிஸ் 28 (14) ஓட்டங்கள். பந்துவீச்சு: பிரபாத் ஜெயசூரிய 3/30 [4])

கோல் மார்வெல்ஸ்: 188/2 (19.2 ஓவ. ) (துடுப்பாட்டம்: அலெக்ஸ் ஹேல்ஸ் ஆ.இ 86 (55), பானுக ராஜபக்ஷ ஆ.இ 46 (26), நிரோஷன் டிக்வெல்ல 25 (22) ஓட்டங்கள். பந்துவீச்சு: அன்ட்ரே பிளெட்சர் 1/11 [2], வனிது ஹசரங்க 1/29 [4], தசுன் ஷானக 0/15 [2])

போட்டியின் நாயகன்: பிரபாத் ஜெயசூரிய

இதேவேளை மற்றைய போட்டியில் கொழும்பு ஸைரக்கர்ஸை ஜஃப்னா கிங்ஸ் வென்றது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 12 ஜூலை 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.